# சாலைப் பாதுகாப்பு அடையாளங்கள் & அடையாளப் பலகைகள் பற்றிய புத்தகம்

# BOOK ON ROAD SAFETY SIGNS & SIGNAGE




நடந்து செல்வோர், சைக்கிளில் செல்வோர், டூவீலர்களில் செல்வோர் & கார்/லாரி டிரைவர்கள் ஆகியோருக்கான பாதுகாப்பு ஆலோசனைகள்

**Road Safety Tips for Pedestrians, Cyclists, Two wheeler Riders & LMV/HMV Drivers**

சாலைப் போக்குவரத்து & நெடுஞ்சாலை அமைச்சகம், இந்திய அரசு,

**Ministry of Road Transport & Highways, Government of India**

# சீட் பெல்ட் SEAT BELT

வாகனத்தில் அமர்ந்திருப்போர் ஒவ்வொருவரின் பாதுகாப்புக்கும் அவசியத் தேவை

**Is necessary for the safety of every person sitting in the vehicle**



| | |
|---|---|
| சீட் பெல்ட் அணிந்திருந்தால் விபத்தின் போது, மரணம் ஏற்படும் வாய்ப்புகள் கணிசமாகக் குறையும். மேலும், விபத்தின் பாதிப்பும் குறையும். | During the crash, seat belts reduce substantially the chances of death & also its impact. |
| விழிப்புணர்வு மிக்க விவரம் தெரிந்த பயணிகளும், டிரைவரும் விபத்து ஏற்படக்கூடிய வாய்ப்புகளை குறைத்து விடலாம். | Aware and conscious driver and passengers reduce the chances of mishaps. |
| சீட் பெல்ட் அணியாமல் இருப்பது தண்டனைக்குரிய குற்றம். ₹1000 அபராதம் விதிக்கப்படும். | Not wearing seat belt is punishable offence with fine of ₹1,000. |

# முன்னுரை/Preface

பொருளாதார வளர்ச்சி, தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் நடமாட்டம் அதிகரிப்பு என்றால் சாலைகளில் போக்குவரத்து அதிகரித்து, சாலை விபத்துக்கள் ஏற்படும் அபாயமும், சாலைகளைப் பயன்படுத்துவோர் உயிரிழக்கும் அபாயமும் அதிகரிக்கிறது.

மிகை வேகத்தில் வேகமாக ஓட்டுதல், ஓட்டும்போது மொபைல் போனைப் பயன்படுத்துதல், குடிபோதையில் ஓட்டுவது, சாலை லேன்களை மதிக்காமல் ஓட்டுதல், சிவப்பு விளக்கைத் தாண்டி ஓட்டுதல், வாகனத்தின் நிலைமை, சாலையின் நிலைமை, டிரைவர்/சைக்கிளில் செல்வோர்/நடந்து செல்வோர் போன்றவர்களின் தவறு போன்ற காரணங்களினால் சாலை விபத்துக்கள் ஏற்படுகின்றன.

இது தொடர்பாக, பலமுனை உத்தி ஒன்றை அமைச்சகம் வகுத்திருக்கிறது. சாலைப் பாதுகாப்பை மேம்படுத்த பல்வேறு முன்னெடுப்புக்களை எடுத்திருக்கிறது. அந்த வகையில், சாலைப் பாதுகாப்பு பற்றிய விழிப்புணர்வைப் பரப்பும் முயற்சியாக இந்தப் புத்தகம் வெளியிடப்படுகிறது.

போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவதற்கும், சாலைப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் சாலை அடையாளங்கள் மிகவும் தேவை. இந்த சாலை அடையாளங்கள், மோட்டார் வாகனங்கள், சைக்கிள்கள், நடந்து செல்வோர் மற்றும் சாலைகளைப் பயன்படுத்தும் மற்றவர்கள் உள்பட சாலைப் போக்குவரத்துக்கு வழிகாட்டவும், எச்சரிக்கவும் நெடுஞ்சாலை, சாலை வழி, பாதை வழி, அல்லது இதர வழித்தடங்கள் நெடுகிலும், ஓரங்களிலும், பின்னாலும், மேலேயும் வைக்கப்படுகின்றன. சாலைகளைப் பயன்படுத்தும் ஒவ்வொருவரும் சாலையில் போட்டு வைக்கப்பட்டிருக்கும் குறிகளை, சாலை அடையாளங்களைப் பற்றியும், அவற்றின் அர்த்தத்தையும் அறிந்து வைத்திருக்க வேண்டும். சாலைகளில் எதிரே உள்ள சாலை நிலைமை பற்றி முன்கூட்டி தகவல் தெரிவிப்பதற்காக பலவகையான போக்குவரத்துச் சின்னங்கள் வைக்கப்பட்டுள்ளன. குறிகளும், அடையாளங்களும் டிரைவர்களுக்கு திசை காட்டுகின்றன, எச்சரிக்கின்றன அல்லது வழிகாட்டுகின்றன. சாலைகளைப் பயன்படுத்துவோர் இவற்றைப் புரிந்து கொள்ள வேண்டும். சாலையில் செல்லும்போது அவற்றைப் பார்க்க வேண்டும். இந்தப் புத்தகத்தில் பல்வேறு சாலை அடையாளங்கள் வகைப்படுத்தி காட்டப்படுகின்றன. இவை கட்டாயமானவை, எச்சரிப்பவை, தகவல் தரும் அடையாளங்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

குழந்தைகள், பள்ளிப் பேருந்துகள், சைக்கிள்கள், பாதசாரிகள் ஆகியோரின் பாதுகாப்புக்காக பிரத்யேகமாக தனி செக்ஷன் உள்ளது. அதில் பொருத்தமான படங்களும் சேர்க்கப்பட்டுள்ளன. சாலைப் பாதுகாப்பு பற்றி சாலைகளைப் பயன்படுத்துவோரின் அறிவை மேம்படுத்தும் வகையில் அத்தியாயங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

சமுதாயத்தைப் பாதுகாப்பாக வைப்பதற்காக, சாலைகளைப் பயன்படுத்துவோரிடையே, பாதுகாப்பான சாலைப் பழக்கங்களை வளர்ப்பதில் மத்திய அரசு கொண்டிருக்கும் உறுதிப்பாட்டை இந்தப் புத்தகம் விளக்குகிறது. டிரைவர்களாக விரும்புகிறவர்களுக்கு, டிரைவிங் லைசென்ஸ் எடுக்க விரும்புவோருக்கு, சாலைகளைப் பயன்படுத்தத் தொடங்கியுள்ள இளைஞர்களுக்கு, ஏற்கனவே சாலைகளைப் பயன்படுத்திக் கொண்டிருப்பவர்களுக்கு பயனுள்ளதாக இந்தப் புத்தகம் இருக்கிறது. சாலைகளைப் பயன்படுத்துவோர் தங்களது விழிப்புணர்வை மேம்படுத்திக் கொள்ளவும், சாலைகளில் அதிகப் பொறுப்புடன் நடந்து கொள்ளவும் இந்தப் புத்தகம் உதவும். நமது சாலைகளைப் பாதுகாப்பானதாக ஆக்கிட நாம் கரம்கோர்த்துச் செயல்படுவோம்!

Economic development, technological advances and growing mobility needs mean increased road traffic, leading to increased risk of Road Crashes and fatalities among road users.

The Road Crashes happen due to multiple causes such as over speeding, use of mobile phone, drunken driving, lane indiscipline, jumping red light, vehicular condition, road condition, fault of driver/cyclist/pedestrians etc.

In this context, the Ministry has formulated a multi-pronged strategy and taken various initiatives to improve road safety. This book is an effort to spread awareness about road safety.

Road Signs are vital for regulation of traffic and ensuring road safety. They are placed along, beside, or above a highway, roadway, pathway, or other route to guide and warn road traffic, including Motor vehicles, Bicycles, Pedestrians and other road users. Every road user should know the marking, road signs and their meaning thereof. Many different traffic signs are on the roads, to give advance information about road conditions ahead. Signs and markings also give directions, warnings or guidance to drivers. Road users should understand them and look out for them when on the road. This book depicts various road signs grouped into Mandatory, Cautionary and Informatory signs.

A dedicated section for the safety of children, school buses, bicycles and pedestrians with suitable illustrations is included. Chapters are also added to upgrade road users' knowledge on road safety.

This book shows the commitment of the Central Government to inculcate safer road behavior amongst the road users in order to achieve a safer Society. This book is useful for potential drivers, driving license aspirants, young people who have begun to use roads on their own and also for existing road users. It will help road users to improve their awareness and be more responsible on the roads. If our responsibility towards road safety is realised, the society will be much safer. Let us join hands to make our roads safer!



# உள்ளடக்கம் / INDEX


| அத்தியாயம் / Chapter | பக்கம் எண் / Page No. |
|---|---|
| 1. சாலை அடையாளங்கள் மற்றும் அடையாளப் பலகைகள் பற்றிய தகவல்<br>Information on Road Signs and Signage | 3 |
| 2 கட்டாயமான சாலை அடையாளங்கள் / Mandatory Road Signs | 6 |
| 3. எச்சரிக்கும் சாலை அடையாளங்கள் / Cautionary Road Signs | 17 |
| 4. தகவல்தரும் சாலை அடையாளங்கள் / Informatory Road Signs | 34 |
| 5. சாலையில் போடப்படும் குறிகள் / Road Marking | 43 |
| 6. சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நல்லெண்ணம் படைத்தவர்கள் எப்படி உதவ முடியும்?<br>How Good Samaritans can Help Road Crash Victims? | 45 |
| 7. டிரைவிங்கை மேம்படுத்திட உங்களிடம் காணப்படும் சின்னச்சின்ன தவறுகளைத் திருத்திக் கொள்ளுங்கள்<br>Correct your Common Mistakes to improve Driving | 49 |
| 8. நடந்து செல்வோர், சைக்கிளில் செல்வோர், & பள்ளிப் பேருந்துகளுக்கான பாதுகாப்பு ஆலோசனைகள்<br>Safety Tips for Pedestrians, Cyclists & School Bus | 50 |
| 9. சிக்கலான நிலைமைகளில் டிரைவிங் செய்வது /<br>Driving Under Difficult Conditions | 53 |
| 10. ஒரு நல்ல டிரைவரின் திறமைகள் / Skills of a Good Driver | 56 |
| 11. சாலையில் உங்களின் பார்வைப் புலப்பாட்டை உறுதிப்படுத்துதல் /<br>Ensure your Visibility on Road | 58 |
| 12. முக்கிய தகவல்: சாலை விபத்துக்கள்<br>Vital Information : Road Accidents | 59 |
| 13. சாலையில் உங்களின் பாதுகாப்புக்காக சில விதிகள் & ஒழுங்கு முறைகள்<br>Few Rules & Regulations for your Safety on Road | 63 |
| 14. மோட்டார் வாகனங்கள் (திருத்தம்) சட்டம்,2019-தண்டனை விதிகள்<br>The Motor Vehicles (Amendment) Act, 2019-Provision of Penlities | 74 |

# அத்தியாயம் / Chapter – 1

## சாலை அடையாளங்கள் மற்றும் அடையாளப் பலகைகள் பற்றிய தகவல்
## Information on Road Signs and Signage




**சாலை அடையாளங்களின் நோக்கம்**

நகர்ப்புறங்களிலும், நகரங்களுக்கு வெளியே உள்ள பகுதிகளிலும் உள்ள அனைத்துச் சாலைகளிலும் சாலைகளைப் பயன்படுத்தும் அனைவரும் ஒழுங்கான முறையில் செல்வதற்காக சாலைப் பாதுகாப்பையும், திறனையும் மேம்படுத்துவது சாலை அடையாளங்களின் நோக்கம் ஆகும். சாலைகளைப் பயன்படுத்துவோருக்கு ஒழுங்குமுறை விதிகள் பற்றி சாலை அடையாளங்கள் தெரிவிக்கின்றன. பாதுகாப்பாகவும், ஒரே சீராகவும், திறமையாகவும் செயல்படுவதற்காக எச்சரிக்கைகள் மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குகின்றன.

ஒரு சாலை அடையாளம் பயனுள்ளதாக இருக்க ஐந்து அடிப்படைத் தேவைகளை அது நிறைவேற்ற வேண்டும்:

(a) ஒரு தேவையை நிறைவேற்றுதல்
(b) கவனத்தை ஈர்ப்பது
(c) தெளிவான, எளிமையான அர்த்தத்தை தெரிவிக்கிறது
(d) கட்டுப்படுமாறு கட்டாயப்படுத்துகிறது
(e) சரியாகச் செயல்படுவதற்கு போதிய அவகாசம் தருகிறது.

ஒரு சாலை அடையாளம் இந்த ஐந்து அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் திறனை அதிகப்படுத்துவதற்காக அதன் டிசைன், வைக்கப்படும் இடம், செயல்பாடு, பராமரிப்பு, ஒரே சீரான தன்மை ஆகிய அம்சங்களை கவனமாகப் பின்பற்ற வேண்டும்.

**வடிவம்**

IRC:67-2012, விதிப்படி ஒரு சைன் போர்டின் வடிவம் அடையாளத்தின் தன்மையைப் பொறுத்து எண்கோண வட்டமாக, முக்கோணமாக அல்லது செவ்வகமாக இருக்க வேண்டும்.

**சாலை அடையாளங்களை வைக்கும் இடமும், அதன் செயல்பாடும்**

IRC:67-2012 விதிப்படி, சாலையைப் பயன்படுத்துகிறவரின் பார்வையில், போதுமான அளவுக்கு புலப்படும் வகையில், சாலை அடையாளங்களை வைக்க வேண்டும். சரியான அர்த்தத்தை வெளிப்படுத்துவதற்கு உதவியாக, சாலை

**Purpose of Road Signs**

The purpose of Road Signs is to promote road safety and efficiency by providing for t he orderly movement of all road users on all roads in both urban and non-urban areas. Road Signs notify road users of regulations and provide warning and guidance needed for safe, uniform and efficient operation.

To be effective, a road sign should meet five basic requirements:

a) Fulfill a need;
b) Command attention;
c) Convey a clear, simple meaning;
d) Command compliance and
e) Give adequate time for proper response.

Design, placement, operation, maintenance, and uniformity are aspects that should be carefully considered in order to maximize the ability of a road sign to meet these five basic requirements.

**Shape**

As per IRC: 67-2012, the shape of the sign board should be octagonal circular, triangular or rectangular depending on the nature of sign.

**Placement and Operation of Road Signs**

As per IRC: 67-2012, placement of road signs should be within the road user's view so that adequate visibility is provided. To aid in conveying the proper meaning, the road signs should be appropriately positioned with

அடையாளங்கள் பொருத்தமான இடத்தில், நிலையில், வைக்கப்பட வேண்டும். சாலைகளைப் பயன்படுத்துவோருக்கு அடையாளங்களைப் புரிந்து கொண்டு செயல்பட போதிய நேரம் தருவதற்கு வசதியாக இடத்தில், தெளிவாகத் தெரியும்படியாக வைக்க வேண்டும்.

சாலை அடையாளங்கள் அல்லது அவற்றைத் தாங்கி நிற்கும் பலகைகள் மீது போக்குவரத்துக்குத் தொடர்பில்லாத விளம்பரங்களோ, இதர செய்திகளோ வைக்கப்படக்கூடாது. எனினும், சுற்றுலா நோக்குடைய திசை காட்டும் அடையாளங்கள் மற்றும் குறிப்பான சாலையோர சேவைகள் மற்றும் வசதிகள் தொடர்பான அடையாளங்களை விளம்பரங்களாகக் கருதக் கூடாது.

சாலை அடையாளங்களை ஒரே சீராக, ஒரே மாதிரியான முறையில் வைத்து இயக்க வேண்டும். நல்ல நிலையில் ஒரு சாலை அடையாளம் இருக்கிறது என்பதற்காக, தேவை ஏற்படுமானால் அதை அகற்றுவதற்கோ, மாற்றுவதற்கோ தயங்கக்கூடாது.

**சாலை அடையாளங்களின் ஒரே சீரான தன்மை**

சாலை அடையாளங்கள் ஒரே சீராக இருக்குமானால் அவை சாலைகளைப் பயன்படுத்துவோரின் வேலையை எளிதாக்கும். ஏனென்றால், ஒரே அடையாளங்கள் ஒரே சீரானவையாக இருக்குமானால், அவற்றைப் புரிந்து கொண்டு செயல்படும் நேரம் குறையும்.

**அடையாளங்களை வைக்கும் இடம்**

சாலைகளைப் பயன்படுத்துவோருக்கு, குறிப்பாக டிரைவர்களுக்குத் தகவல் தெரிவிக்கும் ஒரு வழிதான் சாலை அடையாளங்கள். IRC:67-2012 சாலை அடையாளங்களுக்கான நடத்தை விதிகளின்படி, டிரைவர்கள் மிக எளிதில், சரியான நேரத்தில் புரிந்து கொள்ள வசதியான இடத்தில் சாலை அடையாளங்களை வைக்க வேண்டும். சாதாரணமாக, சாலையின் இடதுபுறமாகத்தான் சாலை அடையாளங்கள் வைக்கப்படுவது வழக்கம். இருவழிச் சாலைகளில் பொதுவாக கேரிஜ்வே-யின் இடதுபுறத்தில் அடையாளங்கள் வைக்கப்படலாம். மலைச் சாலைகள் எனில், அடையாளங்கள் பொதுவாக சாலையின் பள்ளத்தாக்கு பக்கத்தில் வைக்கப்படும்.

**அடையாளங்களின்**

IRC:67-2012 விதிப்படி, அணுகும் வாகனங்களுக்காக அடையாளங்களை வாகனங்கள் வரும் திசைக்கு வலதுபக்கமாக வைக்க வேண்டும். எனினும், பார்க்கிங் தொடர்பான அடையாளங்களை தெளிவாகப் பார்வையில் படும்படியாக கேரிஜ்வேக்கு (சுமார்) 15 டிகிரி கோணத்தில் நிறுத்த வேண்டும். கிடைக்கைவாக்கில் உள்ள வளைவுகளில், அடையாளங்களை பொதுவாக கேரிஜ்வேயில் வைக்க வேண்டும். ஆனால் அவற்றை வைப்பதற்கான கோணம் அணுகும் வாகனங்களின் பாதையைப் பொறுத்து இருக்க வேண்டும். அடையாளங்களின் முகப்பு பொதுவாக செங்குத்தாக இருக்க வேண்டும். ஆனால், ஏற்ற இறக்கங்களில் நேர்கோட்டில் இயல்பாக பார்வையில் படுவதற்காகவும், பார்வைக் கோணத்தை மேம்படுத்தவும் அடையாளப் பலகைகளை செங்குத்து நிலையில் இருந்து சற்று முன்னோ, பின்னோ சாய்வான நிலையில் வைப்பது நல்லது.

**அடையாளங்களின் சைஸ்கள்**

ஒரு பொதுவான விதியாக, கட்டாயமான/ ஒழுங்குபடுத்தும் மற்றும் எச்சரிக்கும்/கவனப்படுத்தும் அடையாளங்கள் மூன்று சைஸ்களில் (சிறியது, இயல்பானது, மற்றும் பெரியது) இருக்க வேண்டும். இயல்பான சைஸ்

respect to the location, object, or situation to which it applies. The location and legibility of the road sign should be such as to provide adequate response time to road users.

Road Signs or their supports shall not bear any advertising or other message that is not related to traffic control. However, tourist-oriented directional signs and signs relating to specific wayside services and amenities, when used should not be considered advertising.

Road signs should be placed and operated in a uniform and consistent manner. The fact that a sign is in good physical condition should not be a basis for deferring the removal or change, if it is so warranted.

**Uniformity of Road Signs**

Uniformity of signs simplifies the task of the road user because it helps in recognition and understanding, thereby reducing perception / reaction time.

**Placing of Signs**

The Road signs are the means of communication to the road users, especially drivers. As per IRC:67-2012 Code of Practice for Road Signs, the signs shall be so placed that the drivers can recognize them easily and in time. Normally the signs shall be placed on the left-hand side of the road. For two-lane roads, normally the signs may be placed on the left side of the carriageway. For multi-lane divided roads the signs may be placed on left side of each carriageway. In case of hill roads, the signs shall generally be installed on the valley side of the road.

**Orientation of Signs**

As per IRC: 67-2012, the signs shall normally be placed at right angles to the line of travel of the approaching traffic. Signs relating to parking, however, should be fixed at an angle (approximately) 15 degrees to the carriageway so as to give better visibility. On horizontal curves, the sign should not be fixed normally to the carriageway but the angle of placement should be determined with regard to the course of the approaching traffic. Sign faces are normally vertical, but on gradients it may be desirable to tilt a sign forward or backward from the vertical to make it normal to the line of sight and improve the viewing angle.

**Sizes of Signs**

As a general rule, there shall be three sizes (small, normal and large) of signs for mandatory/ regulatory and cautionary/warning signs. The normal size shall be used

அடையாளங்கள் மெயின் ரோடுகளில் வைக்கப்பட வேண்டும். சிறிய சைஸ் அடையாளங்கள் முக்கியத்துவம் குறைவான சாலைகளில் வைக்கப்பட வேண்டும். நகரச் சாலைகளிலும், எக்ஸ்பிரஸ்வே-க்களிலும் அடையாளங்களை வைப்பதற்கு IRC: 67-2012 விதிகளை பார்க்கவும். வெவ்வேறு அடையாள வகைகளுக்காக IRC 67-2012 ஆவணத்தைப் பார்க்கவும்.

**அடையாளங்களின் பார்வைப் புலப்பாடு**

குறிப்பாக, கட்டிடங்கள் உள்ள விளக்குகள் எரியும் இடங்களில் பார்க்கிங்கையும், ஸ்டாப்பிங்கையும் ஒழுங்குபடுத்தும் அடையாளங்கள் நீங்கலாக, இரவு நேரத்தில் கவனப்படுத்தும்/ எச்சரிக்கும் அடையாளங்கள்/ மற்றும் ஒழுங்குபடுத்தும் அடையாளங்கள் தெளிவாகவும், அதிகம் பார்வையில் படும்படியாகவும் இருக்க வேண்டும். அதற்கு ஒளிரும் பெயிண்ட்டுகள் அல்லது பிரதிபலிக்கும் சாதனங்கள் மற்றும் ஷீட்டுகள் உள்பட பிரதிபலிப்புப் பொருட்களில் அடையாளங்கள் வரையப்பட வேண்டும். எனினும், இதனால் சாலைகளைப் பயன்படுத்துவோரின் கண்கள் கூசும்படியாக இருக்கக்கூடாது.

**எழுத்துக்களின் சைஸ்**

சாலையின் வேகம், வகைப்பாடு மற்றும் இடம் தொடர்பாக எழுத்தின் சைஸை தேர்ந்தெடுக்க வேண்டும். எழுத்துக்கள் மிகப்பெரியதாகவோ, தடைப்படுத்தும் வகையிலோ இல்லாமல், தெளிவாகப் புரியும்படியாக போதுமான சைஸில் எழுத்து இருக்க வேண்டும். (பார்க்க: IRC: 67-2012.)

**விளக்கும் பிளேட்டுகள்/ துணை பிளேட்டுகள்**

விளக்கும் பிளேட் பிரதிபலிக்கக்கூடிய வெள்ளை நிறப் பின்னணியில், 20 மிமீ கருப்புப் பார்டரில் கருப்பு எழுத்துக்களில் எழுதப்பட வேண்டும். எண்களை இந்திய எண்களின் சர்வதேச வடிவிலும், எழுத்துச் செய்திகள் ஆங்கிலத்தில் மற்றும்/ அல்லது தேவை ஏற்படுமானால் மற்ற மொழிகளில் எழுதப்பட வேண்டும். அடையாளத்தின் சைஸைக் கட்டுப் படுத்துவதற்காக, இரண்டு மொழிகளில் மட்டுமே எழுதப்பட வேண்டும். (பார்க்க: IRC: 67-2012).

**அடையாளங்களின் சேர்க்கை**

ஒரே நேரத்தில் டிரைவர்களின் பார்வையில் படும்படியாக அடையாளங்கள் அதிக எண்ணிக்கையில் வைக்கப் படுமானால், அந்தத் தகவலை புரிந்து கொள்வது அதிகக் கடினமாக இருக்கும். எனவே, அணுகும் வாகனத்தின் டிரைவர் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக, எந்த ஒரு கம்பத்திலும் இரண்டு அடையாளங்களுக்கு மேல் வைக்கக் கூடாது என்று ஐஆர்சி கூறுகிறது. இது ஒரே இடத்தில தனித்தனி கம்பங்களில் வைக்கப்படும் அடையாளங் களுக்கும் பொருந்தும்.

for main roads and the small size shall be used for less important roads. For Urban roads and Expressways, reference may please be made to IRC: 67-2012. General dimensions of different categories of signs IRC 67-2012 document may be referred.

**Visibility of Signs**

In order to make signs more visible and legible at night, in particular cautionary / warning signs and regulatory signs other than those regulating parking and stopping in lighted streets of built-up areas shall be lighted or provided with reflective material including luminous paints or reflective devices and sheetings. Care should, however, be taken that this does not result in road users becoming dazzled (Refer: IRC: 67-2012).

**Sizes of Letters**

Letter size should be chosen with due regard to the speed, classification and location of the road, so that the sign is of adequate size for legibility but without being too large or obtrusive (Refer: IRC: 67-2012).

**Definition Plates / Supplementary Plates**

The definition plate shall have white background of retro-reflective and black letters with 20 mm wide black border. Numerals shall be inscribed in international form of Indian numerals and word messages shall be in English and/or other languages as necessary. To contain the size of the sign, the number of languages on the signs shall normally be limited to two (Refer IRC: 67-2012).

**Combination of Signs**

The more the number of signs which drivers are presented with simultaneously, the greater the difficulty they are likely to have in assimilating the information. Therefore IRC provides that, not more than two signs should be erected on anyone post when intended to be read from an approaching vehicle. This also applies to signs mounted at the same location on separate posts.



அத்தியாயம் / Chapter – 2

# கட்டாயமான சாலை
# Mandatory Road Signs

சாலையில் குறிப்பான ஒரு பகுதியை பயன்படுத்தும் போக்குவரத்துக்களுக்கு இந்த அடையாளம் கட்டாயமாகும். ஒருவர் என்ன செய்ய வேண்டும், என்ன செய்யக்கூடாது என்பதை இவை காட்டுகின்றன. கட்டாய சாலை அடையாளங்கள் பொதுவாக சிவப்பு பார்டருடன் வட்டவடிவில் இருக்கும். அவற்றில் சில அடையாளங்கள் நீல நிறத்தில் இருக்கின்றன. 'நில்' மற்றும் ' வழிவிடு' அடையாளங்கள் முறையே எண்கோணத்திலும், முக்கோண வடிவிலும் இருக்கின்றன. அடையாளங் களை மீறினால் பெருந்தொகை அபராதமாக விதிக்கப்படும், தண்டனையும் கிடைக்கும். ஏனென்றால் மீறினால் பெரிய விபத்துக்கள் ஏற்படக்கூடும்.

These signs are mandatory on the traffic which uses a specific area of the road. These indicate what one must do or must not do. Mandatory Road signs are generally round in shape with red border. Some of them are blue in colour. 'Stop' and 'Give Way' signs are octagonal and triangular in shape, respectively. Violation of the signs attract heavy fines and punishments, as violation could lead to major crashes.

**நில்:** இது ஒரு மிகவும் முக்கியமான, பெரிதாகத் தெரிகிற சாலை அடையாளமாகும். டிரைவர் உடனே வாகனத்தை நிறுத்த வேண்டும் என்பதை இது காட்டுகிறது. வாகனங்கள் கிளைச்சாலையில் இருந்து மெயின் ரோட்டுக் குள் நுழையும்போது நிறுத்த வேண்டிய நிலையில் இந்த அடையாளம் காட்டப்படுகிறது. நில் அடையாளத்தைத் தாண்டி வாகனம் பெரிய சாலைக்குள் நுழைய வேண்டுமானால், அதனால் மெயின் ரோட்டில் போக்குவரத்துக்கு ஆபத்து ஏற்படாது என்பதை உறுதிப்படுத்திய பின்னரே நில் அடையாளத்தைத் தாண்ட வேண்டும்.




**Stop:** This is one of the most important and prominent Road Sign. This indicates that driver should immediately stop. This sign is indicated on the roadways where traffic is required to stop before entering a major road, and where it is intended that the vehicle shall proceed past the stop line only after ascertaining that this will not cause danger to traffic on the main road.

**வழி விடு:** குறிப்பான லேன் கட்டுப்பாடு பின்பற்றப்பட வேண்டிய சாலைச் சந்திப்பில் இந்த அடையாளம் பயன்படுத்தப்படுகிறது. இந்த அடையாளத்தால் கட்டுப்படுத்தப்படும் வாகன, வேகத்தைக் குறைக்க வேண்டும் அல்லது தேவை ஏற்படும்போது மற்ற வாகனங்களுடன் குறுக்கிடாமல் இருக்க நிறுத்தி விட வேண்டும்.




**Give Way:** This sign is used at intersection where a specific lane discipline is to be followed. Vehicle controlled by this sign need to slow down or stop when necessary to avoid interfering with conflicting traffic.

**மாட்டு வண்டிக்குத் தடை:** மெதுவாகச் செல்லும் வாகனத்தினால் பல தடவை போக்குவரத்து தடையின்றி இயங்க முடிவதில்லை. எனவே, சில பகுதிகள் மாட்டு வண்டிகளை ஓட்ட அனுமதிக்கப்படாத பகுதிகள் எனக் குறிக்கப்பட்டுள்ளன.



**Bullock Cart Prohibited:** The slow transport many times obstruct the free flow of traffic, Hence certain zones are marked where bullock carts are not allowed to ply.

**மாட்டு வண்டி & கைவண்டிக்குத் தடை:** சாலையில் மாட்டு வண்டிகளும், கைவண்டிகளும் செல்ல தடுக்கப்பட்டுள்ளன என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. இதுபோன்ற மெதுவாகச் செல்லும் வாகனங்களால் பல தடவைகள் சுமுகமாக போக்குவரத்து இயங்க முடிவதில்லை.



**Bullock & Hand Cart Prohibited:** This sign shows that the road is prohibited for plying of Bullock & Hand Carts. These slow moving carts many a times hinder smooth traffic flow.

**கைவண்டிக்குத் தடை:** கைவண்டியால் தடங்கலின்றி போக்குவரத்து இயங்க முடியாது என்பதல் சாலையில் இந்த அடையாளம் வைக்கப்படுகிறது.



**Hand Cart Prohibited:** This sign indicates that the Hand Cart is prohibited on the road as it can hinder the flow of moving traffic.

**குதிரைவண்டிக்குத் தடை:** குதிரை வண்டிகளால் சாலையில் தடங்கலின்றி போக்குவரத்து இயங்க முடியாது என்பதால் இந்த அடையாளம் வைக்கப்பட்டு, குதிரை வண்டிகள் தடுக்கப்படுகின்றன.



**Tongas Prohibited:** This sign indicates that the Tongas are prohibited on the road as it can hinder the flow of moving traffic.

**குதிரை சவாரிக்குத் தடை:** குதிரையில் சவாரி செய்து செல்வதால் சாலையில் போக்குவரத்து தடையின்றி இயங்க முடியாது என்பதால் குதிரை சவாரிக்குத் தடை என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது.



**Horse Riding Prohibited:** This sign indicates that horse riding is not allowed on the road as it can hinder the flow of moving traffic.

**கேரவன் அனுமதிக்கப்படுவதில்லை:** கேரவன் சாலையில் தடங்கலின்றி போக்குவரத்து இயங்க தடையாக இருப்பதால் கேரவன் அனுமதிக்கப்படுவதில்லை என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது.



**Caravan not allowed:** This sign indicates that caravan is not allowed on this road as it can hinder the flow of moving traffic.

**பேருந்துகளுக்குத் தடை:** இந்தச் சாலையில் பேருந்துகள் செல்ல முடியாது என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. இந்தச் சாலைகள் குறுகிய சந்துகளாக இருக்கலாம் அல்லது கூட்ட நெரிசல் மிகுந்த பகுதியாக இருக்கலாம், அங்கு கனரக வாகனங்களை அனுமதித்தால் போக்குவரத்து தடங்கலின்றி இயங்க முடியாமல் போகலாம்.



**Buses Prohibited:** This sign indicates that buses are not allowed on this road. These could be narrow lanes or congested areas where entry of heavy transport vehicle could obstruct smooth flow of traffic.

---

**கார்களுக்குத் தடை:** இந்தச் சாலையில் கார்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. இந்தச் சாலை குறுகிய சந்தாக அல்லது கூட்ட நெரிசல் மிகுந்த பகுதியாக இருக்கலாம், அங்கு கார்களை அனுமதித்தால் போக்குவரத்து தடங்கலின்றி இயங்க முடியாமல் போகலாம்.



**Cars Prohibited:** This sign indicates that cars are not allowed on this road. These could be narrow lanes or congested areas where entry of cars could obstruct smooth flow of traffic.

---

**டிரக்குகளுக்குத் தடை:** டிரக்குகளும், கனரக மோட்டார் வாகனங்களும் இந்தச் சாலையில் சென்றால் போக்குவரத்து தடங்கலின்றி இயங்குவதற்கு தடையாக இருக்கும் என்பதால், அவற்றுக்கு இந்தச் சாலையில் அனுமதி இல்லை என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது.



**Trucks Prohibited:** This sign indicates that trucks and HMV are not allowed on this road as it can hinder the flow of moving traffic.

---

**டிராக்டருக்குத் தடை:** டிராக்டர்கள் இந்தச் சாலையில் சென்றால் போக்குவரத்து தடங்கலின்றி இயங்குவதற்கு தடையாக இருக்கும் என்பதால், அவற்றுக்கு இந்தச் சாலையில் அனுமதி இல்லை என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது.



**Tractor Prohibited:** This sign indicates that tractor is not allowed on this road as it can hinder the flow of moving traffic.

---

**கட்டுமான வாகனத்திற்குத் தடை:** கட்டுமான வாகனங்கள் மிக மெதுவாக ஓடக்கூடியவை. அவை இந்தச் சாலையில் சென்றால், அவை போக்குவரத்து தடங்கலின்றி இயங்குவதற்கு தடையாக இருக்கும் என்பதால், அவற்றுக்கு இந்தச் சாலையில் அனுமதி இல்லை என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது.



**Construction Vehicle Prohibited:** This sign indicates that construction vehicles are not allowed on this road, as these are slow moving vehicles and could hinder the flow of moving traffic.

**டிரெய்லர் வாகனங்களுக்குத் தடை:** டிரெய்லர் வாகனங்கள் மிக மெதுவாகச் செல்லும் வாகனங்கள், அவை போக்குவரத்து இயங்குவதற்குத் தடங்கலாக இருக்கும் என்பதால் அவை இந்தச் சாலையில் செல்வதற்கு அனுமதி இல்லை என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது.



**Articulated Vehicles Movement Prohibited:** This sign indicates that articulated vehicles are not allowed on this road, as these are slow moving vehicles and could hinder the flow of moving traffic.

**டூ வீலர்களுக்குத் தடை:** டூ வீலர் வாகனங்களில் செல்வோருக்கு பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக சில சாலைகளில் டூவீலர் சவாரிகளுக்குத் தடை விதிக்கப் பட்டுள்ளது. எனவே, இந்த அடையாளம் வைக்கப்பட்டுள்ள சாலைகளை டூ வீலர்கள் பயன்படுத்தக் கூடாது.



**Two Wheeler Prohibited:** In order to ensure the safety of two wheeler riders certain roads which are meant for fast moving vehicles, are prohibited for two wheeler riders. Hence two wheelers should not use the roads where this sign is installed.

**சைக்கிள்களுக்குத் தடை:** சைக்கிள்களில் செல்வோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்து வதற்காக சில சாலைகளில் சைக்கிள் களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த அடையாளம் வைக்கப்பட்டுள்ள சாலைகளை சைக்கிள்கள் பயன்படுத்தக் கூடாது.



**Cycles Prohibited:** In order to ensure the safety of cyclists certain roads which are meant for fast moving vehicles, are prohibited for cyclists. Hence cyclists should not use the roads where this sign is installed.

**ஹாரனுக்குத் தடை:** தேவையில்லாமலும், அளவுக்கு அதிகமாகவும் ஹாரன் ஒலிப்பது ஒழுங்கற்ற பழக்கம் என்று சமூகத்தில் கருதப்படுகிறது. தவிரவும், மருத்துவ மனைகள், பள்ளிகள் போன்ற இடங்களுக்கு அருகில் ஹாரன் ஒலிப்பது முற்றிலுமாகத் தடை செய்யப்பட்டுள்ளது. அவை அமைதி மண்டலங்களாகும். டிரைவர்கள் அமைதி மண்டலத்தை மதித்து ஹாரன் ஒலிக்கக் கூடாது என்று இந்த அடையாளம் காட்டுகிறது.



**Horn Prohibited:** Excessive and unnecessary honking is treated as unruly behaviour in modern society. Besides, there are silence zones where honking is completely prohibited such as near hospitals, schools etc. This sign directs driver to respect the silence zone and not to use horn.

**நுழைய அனுமதி இல்லை:** அனைத்து வாகனங்களுக்கும் தடை என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. ஒரு ஏரியாவின் சில பகுதிகள் அல்லது சாலைகளில் வாகனங்களுக்கு 'நோ என்ட்ரி' என்ற அடையாளம் வைக்கப்பட்டிருக்கும், இந்தப் பகுதிகள் நுழைய அனுமதி இல்லாதவையாகும்.



**No Eptry:** This sign indicates that entry is prohibited for all vehicles. Certain pockets of an area or road are marked as 'no entry' areas for traffic. This could be a restricted area or no-traffic zone.

**ஒரு வழிப்பாதை:** விபத்துகள் மற்றும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக, எதிரே வரும் வாகனங்களுக்கு எதிராகச் செல்வதற்குத் தடை என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது.



**One Way:** This sign indicates that, Traffic against the flow is prohibited to avoid mishaps & traffic jams.

---

**இடதுபுறம் திரும்பத் தடை:** எந்தச் சூழலிலும் இடதுபுறம் திரும்பத் தடுக்கப்படுகிறது என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது.



**Left Turn Prohibited:** This sign indicates that left turn is prohibited under any circumstance

---

**வலது புறம் திரும்பத் தடை:** எந்தச் சூழலிலும் வலதுபுறம் திரும்பத் தடுக்கப்படுகிறது என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது.



**Right Turn Prohibited:** This sign directs driver not to turn towards right side in any circumstance.

---

**முந்திச் செல்வதற்குத் தடை:** முந்துவது தடுக்கப்படுகிறது என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. இது பொதுவாக குறுகலான சாலைகள், பாலங்கள், திருப்பங்கள் போன்ற இடங்களில் முந்துவது அபாயகரமானது என்பதால் அங்கு வைக்கப்பட்டுள்ளது.



**Overtaking Prohibited:** This sign indicates that overtaking is prohibited. These are generally installed at the narrow roads, bridges, turns, etc. where overtaking can be dangerous.

---

**யு-டர்ன் தடுக்கப்பட்டுள்ளது:** யு-டர்ன் தடுக்கப்பட்டுள்ளது என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. சாலைகளில் நெரிசல் மிகுந்த சந்திப்புக்களில் இந்த அடையாளத்தைக் காணலாம். இந்தச் சந்திப்புக்களில் யு-டர்ன் எடுத்தால் பெரிய விபத்துக்கள் அல்லது போக்குவரத்து நெரிசல் ஏற்படலாம்.



**U-Turn Prohibited:** This sign indicates that U-Turn is prohibited. This sign can be seen at some of the busy intersections on roads. The U-turn at these intersections could result in major crashes or traffic jams.

**வலது புறம் திரும்ப & யு-டர்ன் தடுக்கப் பட்டுள்ளது:** சாலைகளில் போக்குவரத்து நெரிசல் அல்லது விபத்துக்கள் நிகழ்வதைத் தவிர்ப்பதற்காக யு-டர்ன் மற்றும் வலதுபுறம் திரும்புவதற்கு தடுக்கப்பட்டுள்ளது.



**Right turn & U-Turn Prohibited:** This sign prohibits driver to take right turn and U turn on roads to avoid traffic jams or mishaps.

---

**எதிரே வரும் வாகனங்களுக்கு முன்னுரிமை:** கடந்து செல்வது கடினமான அல்லது இயலாத குறுகலான சாலைகளில் முன்னுரிமை அடிப்படையில் போக்குவரத்து ஒழுங்கு படுத்தப்படுகிறது. முன்னுரிமை இல்லாத பக்கத்தில் இருந்து எதிரே வரும் வாகனங் களை நோக்கி இது வைக்கப்படுகிறது. அந்தப் பக்கத்தில் இருந்து வரும் வாகனங்கள் எதிரே வாகனங்கள் வராத நிலையில்தான் அனுமதிக்கப்படுகின்றன.



**Priority for Oncoming Traffic:** In narrow roads where passing is difficult or impossible, traffic is regulated by priority movement. It is set up facing traffic on the side which does not have priority. Traffic from that side moves only if there is no oncoming traffic.

---

**காத்திருக்க அனுமதி இல்லை:** பெரிய நகரங்களில் இந்த அடையாளம் மிகவும் முக்கியமானது. குறிக்கப்படும் இடத்தில் ஒரு வாகனத்தை நிறுத்திக் கொண்டு காத்திருப்பது தடுக்கப்படுகிறது.



**No Standing:** This sign is very important in major cities. It prohibits standing of a vehicle in the marked area.

---

**நிறுத்த அல்லது நிற்க முடியாது:** சில சாலைகளில் தொடர்ந்து போக்குவரத்து இயங்கிக் கொண்டிட இருக்க வேண்டும். அங்கு ஒரு வாகனத்தை நிறுத்தினால் அல்லது நிறுத்திக் கொண்டு காத்திருந்தால் மொத்த போக்குவரத்தும் தடைப்படும். இந்த ஏரியாக்களில் 'நிறுத்த & நிற்கத் தடை' என்ற அடையாளம் வைக்கப்பட்டுள்ளது.



**No Stopping or Standing:** Some roads demand continuous flow of traffic and stopping or standing of one vehicle disrupts the whole traffic flow. These areas have 'No Stopping & Standing' signs installed.

---

**நோ பார்க்கிங்:** பெரிய நகரங்களில் இந்த அடையாளம் மிகவும் முக்கியமானது. குறிக்கப்படும் இடத்தில் ஒரு வாகனத்தை நிறுத்தி வைப்பது தடுக்கப்படுகிறது. நிறுத்தி வைக்கப்படும் எந்த ஒரு வாகனமும் இழுத்துச் செல்லப்படும் மற்றும் அதில் இருப்பவருக்கு/ முறைவருக்கு அபராதம் விதிக்கப்படும்.



**No Parking:** This sign is very important in major cities. It prohibits the parking of a vehicle in the marked area. Any vehicle parked can be towed away and the occupant/ driver liable for penal action.

## கட்டாயமான சாலை
## Mandatory Road Signs



**அச்சு லோடு வரம்பு:** இந்த அடையாளம் பொதுவாக ஒரு பாலத்திற்கு முன்னால் வைக்கப்படுகிறது. பாலம் எந்த அளவுக்கு சுமையைத் தாங்கும் என்பதை இது காட்டுகிறது. 4 டன் வரம்பு என்பது 4 டன் அல்லது அதற்கும் குறைவாக ஆக்சில் லோடு உள்ள வாகனங்கள் மட்டுமே பாலத்தின் மீது கடந்து செல்ல முடியும் என்பதை இது காட்டுகிறது.




**Axle Load Limit:** This sign is usually installed before a bridge. It shows the load that the bridge can bear. The limit is 4 tonnes which shows that only vehicles with axle load of 4 tonnes or less can pass over the bridge.

**உயர வரம்பு:** குறைவான உயரமுள்ள சுரங்கப் பாலங்கள், ரயில்வே பாலங்கள் போன்ற வற்றை சில சாலைகள் கடக்க வேண்டி யுள்ளது. விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக, பாலத்திற்கு அடியில் செல்லும் வாகனங் களின் உயரம் குறிக்கப்பட்டுள்ளது. விபத்துக் களையும், தண்டனைகளையும் தவிர்க்க குறிக்கப்பட்டுள்ள வரம்பைக் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.




**Height Limit:** Certain roads pass under bridges, railway lines etc. of low height. To avoid accidents, the height of vehicle which easily passes under the bridge is marked. A marked limit is strictly followed to avoid crashes and penal action.

**நீளவரம்பு:** பாதையைக் கடந்து செல்லும் வாகனத்தின் நீளத்தை சாலையில் வைக்கப் பட்டுள்ள இந்த அடையாளம் காட்டுகிறது. அந்தப் பாதை திடீர் திருப்பமாக, கொண்டை ஊசி வளைவு போன்றவையாக இருக்கலாம். அளவுக்கு அதிகமாக நீளமும், எடை அதிக மாகவும் உள்ள வாகனங்கள் பாதுகாப்பாக திரும்ப முடியாது என இது எச்சரிக்கிறது.




**Length Limit:** This sign on the road indicates the length of the vehicle, which can be manoeuvred through that passage. It could be a sharp turn, a hairpin bend etc. This warns long and oversized vehicles which cannot negotiate a safe turn.

**லோடு வரம்பு:** முன்னே உள்ள சாலையில் செல்லும் வாகனத்தின் லோடுக்கு இது வரம்பு விதிக்கிறது. 5 டன்னுக்கும் மேல் எடை உள்ள வாகனம் எதிரே உள்ள சாலையைப் பயன்படுத்த முடியாது என்பதை இது காட்டுகிறது.




**Load Limit:** This sign limits the load of vehicle plying on the road ahead. It shows that a vehicle weighing more than 5 tonnes cannot use the road ahead.

**அகல வரம்பு:** ஒரு பகுதிக்கு மேல் நுழைய அனுமதிக்கப்படும் வாகனத்தின் அகலத்தை இந்த அடையாளம் காட்டுகிறது. 2 மீட்டருக்கும் மேல் அகலமான வாகனம் நுழைவது கட்டுப்படுத்தப்படுகிறது. இந்தப் பகுதி ஒரு பாலமாக அல்லது குறுகலான சந்தாக இருக்கலாம்.




**Width Limit:** This sign shows the width of the vehicle, which is allowed to enter the zone beyond it. A vehicle wider than 2 meters is restricted from entry. This could be due to a bridge or a narrow lane.

**அதிகபட்ச வேக வரம்பு:** சாலையில் போக்குவரத்து வாகனத்தின் வேக வரம்பை இந்த அடையாளம் குறிக்கிறது. விபத்துக்களையும், தண்டனையையும் தவிர்ப்பதற்காக, காட்டப்பட்டுள்ள வேக வரம்பை கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.




**Maximum Speed Limit:** This sign fixes the speed limit of traffic on the road. The limit shown must be strictly obeyed to avoid penal action and crashes.

**அதிகபட்ச வேக வரம்பு (வாகன வகை):** சாலையில் வெவ்வேறு வகை வாகனங்கள் செல்வதற்கான அதிகபட்ச வேக வரம்பை இந்த அடையாளம் காட்டுகிறது. தண்டனை மற்றும் விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக, அடையாளத்தில் காட்டப்பட்டுள்ள வாகனங்கள் எப்போதும் பின்பற்ற வேண்டிய வேக வரம்பு அடையாளத்தில் காட்டப்படுகிறது.




**Maximum Speed Limit (Vehicle Type):** This sign fixes the maximum speed limit of different type of vehicles on the road. To avoid penal action and accidents, always follow the speed limit prescribed for the vehicles shown in the sign.

**கட்டுப்பாடு முடிவு:** சாலையில் அடையாளத்தில் காட்டப்படும் எந்த ஒரு கட்டுப்பாடும் இங்கு முடிகிறது. அதாவது, அடையாளத்தில்/அடையாளங்களில் காட்டப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் இந்த முனைக்கு அப்பால் செல்லுபடியாகாது. ஆனால், முறைவர்கள் சுணக்கமாக இருக்கக் கூடாது. விபத்துக்களைத் தவிர்க்க அனைத்து பாதுகாப்பு ஏற்பாடுகளையும் எடுக்க வேண்டும்.



**Restriction Ends:** Any restriction shown on the sign on road ends here. This means the restriction imposed by the sign/signs is no more valid beyond this point. But, drivers should not be complacent and should take all safety measures to avoid crashes.

**கட்டாயம் முன்னே செல்க (முன்னே மட்டும்):** வாகனங்கள் முன்னே மட்டுமே போக வேண்டும் என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது.



**Compulsory Ahead (Ahead Only):** This sign directs the traffic should move ahead only.

**கட்டாயம் முன்னே செல்க அல்லது வலதுபுறம் திரும்புக:** வாகனங்கள் முன்னே செல்ல வேண்டும் அல்லது வலதுபுறம் திரும்ப வேண்டும் என இந்த அடையாளம் கூறுகிறது.



**Compulsory Ahead or Right Turn:** This sign directs the traffic to either move ahead or take a right turn.

**கட்டாயம் முன்னே செல்க அல்லது இடது புறம் திரும்புக:** வாகனங்கள் முன்னே செல்ல வேண்டும் அல்லது இடது புறம் திரும்ப வேண்டும் என இந்த அடையாளம் கூறுகிறது.



**Compulsory Ahead or Left Turn:** This sign directs the traffic to either move ahead or take a left turn.

**கட்டாயம் வலதுபுறம் திரும்புக:** வலதுபுறம் திரும்பும்படி வாகனத்திற்கு இந்த அடையாளம் கூறுகிறது.



**Compulsory Turn Right:** This sign directs the traffic to turn towards right.

**கட்டாயம் இடது புறம் திரும்புக:** இடது புறம் திரும்பும்படி வாகனத்திற்கு இந்த அடையாளம் கூறுகிறது.



**Compulsory Turn Left:** This sign directs the traffic to turn towards left.

**கட்டாயம் வலதுபுறம் திரும்புக (முன்னே உள்ள சந்திப்பில்):** முன்னே உள்ள சந்திப்பில் மட்டும் வலதுபுறம் திரும்பும்படி வாகனத்திற்கு இந்த அடையாளம் கூறுகிறது.



**Compulsory Turn Right (In advance of Junction):** This sign directs the driver to turn right only in advance of junction.

**கட்டாயம் இடது புறம் திரும்புக (முன்னே உள்ள சந்திப்பில்):** முன்னே உள்ள சந்திப்பில் மட்டும் இடது புறம் திரும்பும்படி வாகனத்திற்கு இந்த அடையாளம் கூறுகிறது.



**Compulsory Turn Left (In advance of Junction):** This sign directs the driver to turn left only in advance of junction.

**கட்டாயம் இடதுபுறமாகவே செல்க:** டிரைவர் இடதுபுறமாக உள்ள லேனில் ஓட்டவேண்டும் என இந்த அடையாளம் காட்டுகிறது.



**Compulsory Keep Left:** This sign indicates that the driver should drive in the left lane.

**கட்டாயம் வலது புறமாகவே செல்க:** டிரைவர் வலது புறமாக உள்ள லேனில் ஓட்டவேண்டும் என இந்த அடையாளம் காட்டுகிறது.



**Compulsory Keep Right:** This sign indicates that the driver should drive in the right lane.

**குறைந்தபட்ச வேக வரம்பு:** சாலையில் குறிப்பிட்ட குறைந்தபட்ச வேகத்தில் வாகனம் செல்ல வேண்டும் என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது.




**Minimum Speed Limit:** This sign shows that vehicles on the road must keep the specified minimum speed.

**கட்டாய சைக்கிள் பாதை/ சைக்கிள் மட்டுமே:** இந்தப் பாதையில் சைக்கிளில் செல்வோர் மட்டுமே செல்லலாம் என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. மேலும், இந்தப் பாதையில் சைக்கிள்கள் தவிர வேறு எந்த வாகனமும் செல்ல முடியாது.



**Compulsory Cycle Track/Cycle only:** This sign indicates that this is Compulsory cycle track for cyclists. It also restricts the movement of any other traffic except cycles on the track.

**கட்டாய சைக்கிள் பாதை மற்றும் நடந்து செல்வோர் பாதை:** சைக்கிளில் செல்வோரும் & நடந்து செல்வோரும் இந்தப் பாதையைப் பயன்படுத்த வேண்டும் என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. மேலும், சைக்கிள்கள்& நடந்து செல்வோர் தவிர வேறு எந்த வாகனமும் செல்ல முடியாது.



**Compulsory Cyclist and Pedestrian Route:** This sign indicates that cyclist & pedestrian should use this route only. It also restricts the movement of any other traffic except cyclist & pedestrian on the track.

**நடந்து செல்வோர் மட்டும்:** நடந்து செல்வோர் மட்டுமே இந்தச் சாலையில் நடந்து செல்லலாம் என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. வேறு வகை வாகனங்கள் இந்தச் சாலையில் தடுக்கப்பட்டுள்ளது.



**Pedestrian only:** This sign indicates that only pedestrians can walk on this road. The movement of any type of vehicle is prohibited on this road.

**பனிச் சங்கிலி கட்டாயம்:** மலைச் சாலைகளில் பனி பெய்வதால் வழுக்கல் மற்றும் விபத்துக் களைத் தவிர்க்க டயர்களில் பனிச்சங்கிலியை டிரைவர் கட்டாயம் பயன்படுத்த வேண்டும் என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது.



**Compulsory Snow Chain:** This sign indicates that driver must use snow chains on tyres to avoid slipping and mishaps due to snow on the hill roads.

**பேருந்துப் பாதை/ பேருந்துகள் மட்டுமே:** சாலைகளில் பொதுவாகனப் போக்கு வரத்துக்கு வழிவிடுவதற்காக சில பாதைகள் பேருந்துகளுக்காக மட்டுமே ஒதுக்கப் பட்டுள்ளன. வேறு எந்த வாகனமும் ஓட முடியாது.



**Bus Way/Buses only:** On Roads, to facilitate public transport certain lanes are reserved for Buses only where no other vehicle can ply.

**கட்டாயமாக ஹாரன் ஒலிக்கவும்:** ஹாரன் ஒலிப்பதை கட்டாயமாக்கும் சில நிலைமைகள் உள்ளன. மலைச் சாலைகளில் ஒரு திடீர் திருப்பத்தில் திரும்பும்போது பாதுகாப்பு நடவடிக்கையாக, ஹாரன் ஒலிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த அடையாளத்தைப் பார்த்ததும் நீங்கள் இருப்பதை முன்னே வரும் வாகனத்துக்கு உணர்த்துவதற்காக ஹாரனை ஒலிக்கவும்.



**Compulsory Sound Horn:** There are some conditions when blowing horn is compulsory. When turning into a blind turn especially on hill roads blowing horn before the turn is a safety measure. Whenever this is seen do blow the horn to let oncoming traffic know your presence.

## அத்தியாயம் / Chapter – 3

# எச்சரிக்கும் சாலை அடையாளங்கள்
# Cautionary Road Signs

சாலையில் முன்னே உள்ள அபாயங்கள்/நிலைமை பற்றி ஓட்டுநரை இந்த அடையாளங்கள் எச்சரிக்கின்றன. ஓட்டுநர் தமது பாதுகாப்பிற்காக இவற்றுக்குக் கீழ்ப்படிய வேண்டும். இந்த அடையாளங்களை மீறினால் சட்டநடவடிக்கை எதுவும் இருக்காது என்றாலும், புறக்கணிப்பதால் பெரிய விபத்துக்கள் ஏற்படும் என்பதால் இவை மிகவும் முக்கியமானவை. எச்சரிக்கை அடையாளங்கள் பெரும்பாலும் முக்கோண வடிவில் சிவப்பு பார்டருடன் இருக்கின்றன.

These signs caution the driver about the hazards/situations lying ahead on the road. The driver should obey these for his safety. Though violation of these signs do not attract any legal action, they are very important as ignoring them could result in major crashes. Cautionary signs are mostly triangular in shape with red border.

**இடதுபக்க வளைவு:** சாலையில் முன்னே இடதுபக்க வளைவு இருக்கிறது என்று இந்த அடையாளம் எச்சரிக்கிறது. மேலும், இது திடீரென திருப்பம் வரும்போது விபத்து ஏற்படும் வாய்ப்பையும் இது குறைக்கிறது.



**Left Hand Curve:** This sign cautions you about a Left Hand Curve on the road ahead. It also reduces the possibility of crash due to sudden appearance of turn.

**வலதுபக்க வளைவு:** சாலையில் முன்னே வலது பக்க வளைவு இருக்கிறது என்று இந்த அடையாளம் எச்சரிக்கிறது. மேலும், இது திடீரென திருப்பம் வரும்போது விபத்து ஏற்படும் வாய்ப்பையும் இது குறைக்கிறது.



**Right Hand Curve:** The sign cautions about a Right Hand Curve on the road ahead. It also reduces the possibility of crash due to sudden appearance of turn.

**வலது கொண்டை ஊசி வளைவு:** குறிப்பாக மலைச்சாலைகளில் கொண்டை ஊசி வளைவுகள் திடீரெனத் திரும்பக் கூடியவை. சாலையில் முன்னே திடீரென வலதுபுறம் திரும்பும் வளைவு இருக்கிறது என்று இந்த அடையாளம் எச்சரிக்கிறது. ஓட்டுநர் வேகத்தைக் குறைத்து, பாதுகாப்பாக ஓட்டவேண்டும்.



**Right Hair Pin Bend:** Hair Pin Bends are sharp turns especially on hill roads. This sign warns about a sharp right turn on the road ahead. Driver should reduce speed and drive safely.

**இடது கொண்டை ஊசி வளைவு:** குறிப்பாக மலைச்சாலைகளில் கொண்டை ஊசி வளைவுகள் திடீரெனத் திரும்பக் கூடியவை. சாலையில் முன்னே திடீரென இடது புறம் திரும்பும் வளைவு இருக்கிறது என்று இந்த அடையாளம் எச்சரிக்கிறது. டிரைவர் வேகத்தைக் குறைத்து, பாதுகாப்பாக ஓட்டவேண்டும்.



**Left Hair Pin Bend:** Hair Pin Bends are sharp turns especially on hill roads. This sign warns about a sharp left turn on the road ahead. Driver should reduce speed and drive safely.

**வலது ரிவர்ஸ் வளைவு:** வலதுபுறத்தை நோக்கி ஜிக்ஜாக் திருப்பம் இருக்கிறது என்று டிரைவரை இந்த அடையாளம் எச்சரிக்கிறது. டிரைவர் வேகத்தைக் குறைத்து பாதுகாப்பாக ஓட்ட வேண்டும்.



**Right Reverse Bend:** This sign cautions the driver about the zig zag turn towards Right. Driver should reduce speed and drive safely.

**இடது ரிவர்ஸ் வளைவு:** இடது புறத்தை நோக்கி ஜிக்ஜாக் திருப்பம் இருக்கிறது என்று டிரைவரை இந்த அடையாளம் எச்சரிக்கிறது. டிரைவர் வேகத்தைக் குறைத்து பாதுகாப்பாக ஓட்ட வேண்டும்.



**Left Reverse Bend:** This sign cautions the driver about the zig zag turn towards left. Driver should reduce speed and drive safely.

**தொடர்ச்சியாக வளைவுகள்:** சாலையில் முன்னே தொடர்ச்சியாகப் பல வளைவுகள் இருக்கின்றன என்று டிரைவரை இந்த அடையாளம் எச்சரிக்கிறது. எனவே டிரைவர் வேகத்தைக் குறைத்து, பாதுகாப்பாக ஓட்டவேண்டும்.



**Series of Bends:** This sign warns of a series of bends on the road ahead so that the driver can slow down and drive safely.

**270 டிகிரி லூப்:** முன்னால் சாலையைச் சுற்றி 270 டிகிரிக்கு லூப் இருப்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. எனவே டிரைவர் வேகத்தைக் குறைத்து, பாதுகாப்பாக ஓட்டவேண்டும்.



**270 degree Loop:** The sign indicates that there is a 270 degree loop winding road ahead so that the driver can slow down and drive safely.

**பக்கச்சாலை வலது:** முன்னே வலதுபக்கச் சாலை இருப்பதாக இந்த அடையாளம் டிரைவரை எச்சரிக்கிறது. டிரைவர் வேகத்தைக் குறைத்து, பாதுகாப்பாக ஓட்டவேண்டும்.



**Side Road Right:** This sign cautions the driver about the right side road ahead. Driver should reduce the speed and drive safely.

**பக்கச்சாலை இடது:** முன்னே இடது பக்கச் சாலை இருப்பதாக இந்த அடையாளம் டிரைவரை எச்சரிக்கிறது. டிரைவர் வேகத்தைக் குறைத்து, பாதுகாப்பாக ஓட்டவேண்டும்.



**Side Road Left:** This sign cautions the driver about the left side road ahead. Driver should reduce the speed and drive safely.

**Y -குறுக்குச் சந்திப்பு:** முன்னே சாலை இருக்கும் நிலைமையை இந்த அடை யாளங்கள் எச்சரிக்கின்றன. சாலை Y - வடிவில் இடது புறமாக இரண்டாகப் பிரிகிறது. டிரைவர் வேகத்தைக் குறைத்து, பாதுகாப்பாக ஓட்டவேண்டும்.



**Y - Intersection:** These road signs warn about the actual formation of road ahead. Road is divided into two in the shape of 'Y' on the left side. Driver should reduce the speed and drive safely.

**Y - குறுக்குச் சந்திப்பு:** முன்னே சாலை இருக்கும் நிலைமையை இந்த அடையாளங்கள் எச்சரிக்கின்றன. சாலை Y - வடிவில் வலது புறமாக இரண்டாகப் பிரிகிறது. டிரைவர் வேகத்தைக் குறைத்து, பாதுகாப்பாக ஓட்டவேண்டும்.



**Y - Intersection:** These road signs warn about the actual formation of road ahead. Road is divided into two in the shape of 'Y' on the right side. Driver should reduce the speed and drive safely.

**Y - குறுக்குச் சந்திப்பு:** முன்னே சாலை இருக்கும் நிலைமையை இந்த அடையாளங்கள் எச்சரிக்கின்றன. சாலை 'Y'-வடிவில் இரண்டாகப் பிரிகிறது. டிரைவர் வேகத்தைக் குறைத்து, பாதுகாப்பாக ஓட்டவேண்டும்.



**Y - Intersection:** These road signs caution about the actual formation of road ahead. The road is divided into two in the shape of 'Y'. Driver should reduce the speed and drive safely.

**குறுக்குச்சாலை:** முன்னே சாலையில் ஒரு கிராஸிங் இருக்கிறது என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. வாகனத்தை மெதுவாக ஓட்டி, இரண்டுபுறங்களிலும் பார்த்து, கவனமாக சாலையை கடக்க வேண்டும்.



**Cross Road:** This sign shows that there is a crossing of road ahead. The vehicle should be slowed and crossing done cautiously after checking both sides.

**சுற்றுச் சந்திப்பு:** குறுக்குச் சந்திப்புச் சாலைக்கு மாற்றாக ரவுண்டு அபௌட் (சுற்றுச் சந்திப்புப் பாதை) இருக்கிறது. இது டிராபிக் லைட்டு களின் உதவி இன்றி வாகனங்களின் போக்குவரத்தை தடங்கலின்றி இயங்க அனுமதிக்கிறது. முன்னே ஒரு ரவுண்டு அபௌட் இருக்கிறது என்று டிரைவருக்கு இந்த அடையாளம் எச்சரிக்கிறது. டிரைவர் ரவுண்டு அபௌட்டுக்குள் நுழைவதற்கு முன்னால் சரியான லேனை எடுக்க வேண்டும்.



**Round-about:** Round-about is a substitute for a road intersection. It allows smooth flow of traffic without the aid of traffic lights. This sign warns about a round-about ahead and the driver has to take the correct lane well before moving into the round about.

**டிராபிக் சிக்னல்:** சாலையில் உள்ள இந்த அடையாளம் மூன்று கலர் சிக்னல் லைட்டுகளால் சாலை ஒழுங்குபடுத்தப் படுகிறது என்பதைக் காட்டுகிறது.



**Traffic Signal:** This sign on the road shows that this road is regulated by three-colour light signals.

**T - குறுக்குச் சந்திப்பு:** முன்னே T - குறுக்குச் சந்திப்பு இருக்கிறது. முன்னால் போக முடியாது என்று டிரைவரை இந்த அடையாளம் எச்சரிக்கிறது. வாகனங்கள் இடதுபுறமாக அல்லது வலதுபுறமாக திரும்ப வேண்டும். இது சாலையில் எந்தத் திசையில் செல்ல வேண்டும் என்று டிரைவர் திட்டமிட இது உதவுகிறது.



**T - Intersection:** This sign cautions driver about the T-intersection ahead and there is no forward movement. Traffic has to either turn left or right. This helps the driver in planning his movement on road.

**T -குறுக்குச் சந்திப்பு பெரிய சாலை முன்னே:** முன்னே உள்ள T -குறுக்குச் சந்திப்பு பெரிய சாலைக்குள் இந்த சாலை இணைகிறது என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. வாகனங்கள் இடதுபுறமாக அல்லது வலதுபுறமாகத் திரும்ப வேண்டும். இது டிரைவர் தமது ரூட்டைத் திட்டமிட உதவும்.



**T - Intersection Major Road Ahead:** This sign indicates that the road is merging into T-Intersection major road ahead. Traffic has to either turn left or right. This helps the driver to plan his route.

**முன்னே பெரிய சாலை:** சாலையின் ஒரு குறுக்குச் சந்திப்பு முன்னே உள்ள பெரிய சாலையில் இணைகிறது என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. வாகனங்கள் இடதுபுறமாக அல்லது வலது புறமாக திரும்ப வேண்டும் அல்லது முன்னே செல்ல வேண்டும். இது டிரைவர் சரியான ரூட்டை திட்டமிட உதவும்.



**Major Road Ahead :** This sign indicates that there is an intersection of road into a major road ahead. Traffic must turn to the left or right or go ahead. This helps the driver to plan his correct route.

**தடுமாறும் குறுக்குச் சந்திப்பு:** நேர்ச்சாலையில் முன்னே முதலில் ஒரு வலது புறத்தில் ஒரு சாலையும், பிறகு குறுகிய தொலைவுக்குள் இடதுபுறத்தில் இன்னொரு சாலையும் சந்திக்கின்றன என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது.



**Staggered Intersection:** This sign indicates that a straight road is being met first by a road on the right and then on the left with a short distance between them.

**தடுமாறும் குறுக்குச் சந்திப்பு:** நேர்ச்சாலையில் முன்னே முதலில் ஒரு இடது புறத்தில் ஒரு சாலையும், பிறகு குறுகிய தொலைவுக்குள் வலது புறத்தில் இன்னொரு சாலையும் சந்திக்கின்றன என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது.



**Staggered Intersection:** This sign indicates that a straight road is being met first by a road on the left and then on the right with a short distance between them.

**முன்னே இணையும் சாலை (இடது புறமிருந்து):** முன்னே இருக்கும் சாலை இடது புறத்தில் மற்றொரு சாலையுடன் இணைவதை இந்த அடையாளம் காட்டுகிறது. டிரைவர் வேகத்தைக் குறைத்து, பாதுகாப்பாக நகர வேண்டும்.



**Merging Traffic Ahead (From left):** This sign indicates that the road ahead is merging with another road on the left side. Driver should reduce the speed and move safely.

**முன்னே இணையும் சாலை (வலது புறமிருந்து):** முன்னே இருக்கும் சாலை வலது புறத்தில் மற்றொரு சாலையுடன் இணைவதை இந்த அடையாளம் காட்டுகிறது. டிரைவர் வேகத்தைக் குறைத்து, பாதுகாப்பாக நகர வேண்டும்.



**Merging Traffic Ahead (From Right):** This sign indicates that the road ahead is merging with another road on the right side. Driver should reduce the speed and move safely.

**முன்னே குறுகிய சாலை:** முன்னே இருக்கும் சாலை குறுகலானது என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. இந்த அடையாளத்திற்குப் பிறகு சாலையின் அகலம் குறைகிறது. அதற்கு ஏற்ப வாகனங்கள் அட்ஜஸ்ட் செய்ய வேண்டும்.



**Narrow Road Ahead:** This sign shows that road ahead is narrow. The width of the road narrows after this sign and thus traffic should adjust accordingly.

---

**சாலை அகலமாகிறது:** முன்னே இருக்கும் சாலை அகலமாகிறது என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. இந்த அடையாளத்திற்குப் பிறகு சாலையின் அகலம் அதிகரிக்கிறது. அதற்கு ஏற்ப வாகனங்கள் அட்ஜஸ்ட் செய்ய வேண்டும்.



**Road Widens:** This sign shows that road ahead is wide. The width of the road widens after this sign and thus traffic should adjust accordingly.

---

**முன்னே குறுகலான பாலம்:** சில நேரங்களில் சாலையை விட அகலம் குறைவான ஒரு பாலத்தில் சாலை இணைகிறது. அத்தகைய பாலத்திற்கு முன்னே (சாலையைவிட குறுகலான) இந்த அடையாளம் வைக்கப்படுகிறது. டிரைவர் பாதுகாப்பாக ஓட்டுவதற்காக, வேகத்தைக் குறைத்து எதிரே வரும் வாகனங்களைக் கவனிக்க வேண்டும்.



**Narrow Bridge Ahead:** Sometimes road converges to a bridge which is less wide than the road. This sign is placed before such bridge (narrower than the road). The driver should reduce speed and watch out for oncoming traffic for safe driving.

---

**செங்குத்தான மேடு:** முன்னே செங்குத்தான மேடு இருக்கிறது, மேட்டில் ஏறுவதற்கு டிரைவர் தயாராகி, சரியான கியர் போடவேண்டும் என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. பெரும்பாலும் இந்த அடையாளங்கள் செங்குத்தான மேடும், பள்ளங்களும் காணப் படும் மலைச் சாலைகளில் வைக்கப் பட்டுள்ளன.



**Steep Ascent:** The sign shows there is steep ascent ahead and driver should get ready to climb and put the vehicle in proper gear. Mostly these signs are on hill roads where steep ascent and descent are normal.

---

**செங்குத்தான இறக்கம்:** முன்னே செங்குத் தான மேடு இருக்கிறது, மேட்டில் ஏறுவதற்கு டிரைவர் தயாராகி, சரியான கியர் போடவேண்டும் என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. பெரும்பாலும் இந்த அடையாளங்கள் செங்குத்தான மேடும், பள்ளங்களும் காணப்படும் மலைச் சாலை களில் வைக்கப்பட்டுள்ளன.



**Steep Descent:** This shows there is steep descent ahead and driver should get ready for descent and put the vehicle in proper gear. One should not try to speed up on descent as it loosens grip on the vehicle. Mostly, these signs are on hill roads where steep ascent and descent are normal.

**குறைக்கப்பட்ட வண்டிப்பாதை இடது லேன்(கள்) குறைக்கப்பட்டது:** முன்னே இருக்கும் வண்டிப்பாதையின் அகலம் குறைக்கப்பட்டிருக்கிறது என்று இந்த அடையாளம் டிரைவரை எச்சரிக்கிறது. வண்டிப்பாதை மூடப்பட்டிருக்கும்போது அல்லது ரிப்பேருக்காக அகலம் குறைக்கப் பட்டபோது, பிரிக்கப்படாத வண்டிப்பாதை களில் இந்த அடையாளம் வைக்கப்பட்டுள்ளது.



**Reduced Carriageway Left Lane(s) Reduced:** This sign cautions the driver of the reduction in the width of the carriageway ahead. This is displayed on undivided carriageways when some portion of the carriageway is closed or reduced for repairs.

**குறைக்கப்பட்ட வண்டிப்பாதை வலது லேன்(கள்) குறைக்கப்பட்டது:** முன்னே இருக்கும் வண்டிப்பாதையின் அகலம் குறைக்கப்பட்டிருக்கிறது என்று இந்த அடையாளம் டிரைவரை எச்சரிக்கிறது. வண்டிப்பாதை மூடப்பட்டிருக்கும்போது அல்லது ரிப்பேருக்காக அகலம் குறைக்கப் பட்டபோது, பிரிக்கப்படாத வண்டிப்பாதை களில் இந்த அடையாளம் வைக்கப்பட்டுள்ளது.



**Reduced Carriageway Right Lane(s) Reduced:** This sign cautions the driver of the reduction in the width of the carriageway ahead. This is displayed on undivided carriageways when some portion of the carriageway is closed or reduced for repairs.

**இரட்டை வண்டிப்பாதைகள் ஆரம்பம்:** ஒற்றை வண்டிப்பாதை முடிந்து முன்னே இரட்டை வண்டிப்பாதை இருக்கும்போது இந்த அடையாளம் வைக்கப்படுகிறது.



**Start of Dual Carriageway:** This sign is displayed when a single carriageway ends in a dual carriageway ahead.

**இரட்டை வண்டிப்பாதையின் முடிவு:** இரட்டை வண்டிப்பாதை முடிந்து ஒற்றை வண்டிப்பாதை ஆரம்பமாகும்போது இந்த அடையாளம் வைக்கப்படுகிறது.



**End of Dual Carriageway:** This sign is displayed when a dual carriageway ends and a single carriageway begins.

**சாலை டிவைடரில் இடைவெளி:** சாலையின் டிவைடரில் முன்னே ஒரு இடைவெளியும், U-டர்ன் வசதியும் இருக்கிறது என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. டிரைவர் விபத்தைத் தவிர்ப்பதற்காக வேகத்தைக் குறைத்து, சரியான லேனை எடுக்க வேண்டும்.



**Gap in Median:** This sign shows that there is a gap in the divider of the road ahead and a provision for U-turn. The driver slows and takes correct lane to avoid any crash.

**நடந்து செல்வோர் கடப்பதற்கு:** நடந்து செல்வோர் சாலையைக் கடப்பதற்காக டிரைவர் வாகனத்தின் வேகத்தைக் குறைக்க வேண்டும் அல்லது நிறுத்த வேண்டும் என்று இந்த அடையாளம் எச்சரிக்கிறது. சாலையின் ஒரு பகுதியில் ஜீப்ரா கிராஸிங் எனப்படும் வெள்ளைப் பட்டைகள் தீட்டப்பட்டுள்ளன. ஜீப்ரா கிராஸிங்கில் நடந்து செல்வோருக்கு சாலையில் முதல் உரிமை இருக்கிறது.



**Pedestrian Crossing:** Sign cautions the driver to either slow down or stop the vehicle and allow the pedestrian to cross the road. The part of the road is also marked in white strips known as zebra crossing. At zebra crossing the Pedestrian has first right on the road.

**முன்னே பள்ளி:** முன்னே/ அருகில் ஒரு பள்ளி இருக்கிறது என்பதை இது காட்டுகிறது. டிரைவர் விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக வேகத்தைக் குறைத்து, கவனமாக ஓட்ட வேண்டும். குழந்தைகள் அடிக்கடி சாலையைக் கடக்கும்போது திடீரென ஓடத் தொடங்குகின்றனர் அல்லது திடீரென செயல்படுகின்றனர். எனவே, எப்போதும் குழந்தைகளின் பாதுகாப்புக்காக பள்ளிகளுக்கு அருகில் கவனமாக டிரைவ் செய்ய வேண்டும்.



**School Ahead:** This shows that there is a school ahead/nearby. Driver has to slow down and drive carefully to avoid crashes. Children often try to cross the road by running or make unexpected moves. So, for their safety always drive carefully near schools.

**கட்டிடப் பகுதி:** கட்டிடப் பகுதி முன்னே இருக்கிறது என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. கூட்டம் நிறைந்த இடம் அல்லது ஒரு நகர் நெருங்கிக் கொண்டிருக்கிறது என்பதை இது டிரைவருக்கு எச்சரிக்கிறது.



**Built-up Area:** This sign shows that a built-up area is located ahead. It cautions the driver about a crowded area or a city approaching.

**இருவழிப் போக்குவரத்து:** இருவழிச் சாலை முன்னே இருக்கிறது, இருவழிகளிலும் போக்குவரத்து அனுமதிக்கப்படுகிறது என்பதை டிரைவருக்கு எச்சரிக்கிறது.



**Two Way Operation:** This sign cautions the driver about two way road, ahead with traffic allowed both ways.

**முன்னே உள்ள குறுக்குச் சாலையில் இருவழிப் போக்குவரத்து பற்றிய எச்சரிக்கை:** இந்த அடையாளம் குறுக்குச் சாலையில் இருவழிப் போக்குவரத்து இருக்கிறது என்பதை டிரைவருக்கு காட்டி எச்சரிக்கிறது. இதனால் டிரைவர் வேகத்தைக் குறைத்து, பாதுகாப்பாகக் கடக்கலாம்.



**Two way Traffic on Cross Road Ahead Warning:** This sign cautions the driver about both way traffic ahead on the cross road, so that driver can reduce the speed and cross safely.

**லேன் மூடப்பட்டது (இரண்டு லேன் வண்டிப் பாதை):** இரண்டு லேன் வண்டிப்பாதையில் முன்னே ஒரு லேன் மூடப்பட்டிருக்கிறது என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது.



**Lane Closed (Two Lane Carriageway):** This sign indicates that one lane is closed on the two lane carriageway ahead.

---

**லேன் மூடப்பட்டது (மூன்று லேன் வண்டிப்பாதை):** மூன்று லேன் வண்டிப் பாதையில் முன்னே ஒரு லேன் மூடப் பட்டிருக்கிறது என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது.



**Lane Closed (Three Lane Carriageway):** This sign indicates that one lane is closed on the three lane carriageway ahead.

---

**லேன் மூடப்பட்டது (நான்கு லேன் வண்டிப் பாதை):** நான்கு லேன் வண்டிப்பாதையில் முன்னே ஒரு லேன் மூடப்பட்டிருக்கிறது என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது.



**Lane Closed (Four Lane Carriageway):** This sign indicates that one lane is closed on the four lane carriageway ahead.

---

**இரட்டை வண்டிப்பாதையில் போக்குவரத்து திருப்பிவிடப்பட்டது:** முன்னே உள்ள வண்டிப் பாதையில் ஒரு லேனில் இருந்து இன்னொரு லேனுக்கு போக்குவரத்து திருப்பி விடப் பட்டுள்ளது என்பதை இந்த அடையாளம் காட்டுகிறது. இதனால் டிரைவர் வேகத்தைக் குறைத்து, பாதுகாப்பாக ஓட்டிச் செல்லலாம்.



**Traffic Diversion on Dual Carriageway:** This sign indicates that traffic is diverted from one lane to another on the carriageway ahead so that driver can reduce the speed and drive safely.

---

**ஆட்கள் வேலை செய்கின்றனர்:** சாலையில் சில செப்பனிடும் வேலைகள் நடக்கின்றன; ஆட்கள் வேலை செய்கிறார்கள் என்பதை இது காட்டுகிறது. சாலையில் இருக்கும் வேலையாட் களுக்கு போக்குவரத்து வாகனங்களிடம் இருந்து பாதுகாப்பு தேவை. எனவே, செப்பனிடும் வேலை நடைபெறும் இடத்தில் இந்த அடையாளம் வைக்கப்படுகிறது. டிரைவர் வேலையாட்களின் பாதுகாப்புக்காக விலக்குப் பாதையில் மெதுவாகவும், கவனமாகவும் ஓட்டிச் செல்ல வேண்டும்.



**Men at Work:** This shows that there is some repair work being done on the road and workers are on duty. Workers on road need safety from the traffic and hence this sign is placed before the site of repair. The driver should drive slowly and carefully at diversions to ensure safety of workers.